**தலைப்பு 229 சட்டமா அதிபர் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 229 - சட்டமா அதிபர் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்கதேசியகணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் சட்டமா அதிபர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும், அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 30 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 15 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சட்டமா அதிபர் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும், நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும், பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணகீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள் , செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.
தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக்கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச்செல்வதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு, அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஓட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ, கூட்டாகவோ தாக்கமளிப்பதால், பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு, பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும்போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தை இனங்காணும் போதும், மதிப்பீட்டின்போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச்செய்தல், மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும்போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் , சம்பவங்கள் பொருத்தமாகவும், நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) சென்ற ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக் கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

2022 திசெம்பர் 13 திகதிய இலகம் 2022/05 கொண்ட அரச கணக்குகள் வழிகாட்டி பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதும், அச் சந்தர்பங்களிலிருந்து விலகிய சந்தர்பங்கள் பின்வருமாறு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 13 திகதிய இலகம் 2022/05 கொண்ட அரச கணக்குகள் வழிகாட்டி 7.5 பந்தி பிரகாரம் 2022 திசெம்பர் 31 திகதியன்று நிதி செயலாற்றல் கூற்றின் மீதி, கட்டுநிதி இணக்க கூற்றின் பிரகார மீதி மற்றும் ஆண்டிறுதி கட்டுநிதி மீதியின் கூட்டுத் தொகைக்கு சமமாக வேண்டிய போதும், நிதி செயலாற்றல் கூற்றில் திசெம்பர் 31 திகதியன்று ரூபா 4,149 ஆன கட்டுநிதி மீதி காட்டப்படாததுடன், 2022 திசெம்பர் 31 திகதியன்று ஏசீஏ – 3 இல் திறைசேரி புத்தகம் பிரகாரம் காணப்பட்ட மேற்குறிப்பிட்ட மீதி நிதி நிலைமை மீதான கூற்றில் அது வழிக் காசாக மூலதன சொத்துக்களின் கீழும், கட்டு நிதி மீதியாக நடைமுறை பொறுப்பின் கீழும் காட்டப்பட்டிருக்கவில்லை. | நிதி செயலாற்றுகை கூற்றில் திசெம்பர் 31 திகதியன்று கட்டுநிதி மீதியானது திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் பெறுமதி சூனியமாக உள்ளதால் மீதி காட்டப்படாத போதும் திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் திசெம்பர் 31 திகதியன்று ரூபா 4,149 ஆன கட்டுநிதி மீதியை கணக்காய்வினால் சுட்டிக் காட்டியுள்ளவாறு எதிர்காலத்தில் செம்மையாக்க நடவடிக்கை எடுப்பதாகவும், அம் மீதி வழியில் காசாக நடைமுறை சொத்துக்களின் கீழ் மற்றும் கட்டுநிதி மீதியாக நடைமுறை பொறுப்பின் கீழ் காட்டப்படாததால் ஏற்பட்ட தவறை 2023 இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சீராக்க குறித்துக் கொண்டதாகஅறிவிக்கப்பட்டிருந்தது. | அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேணடியதுடன் கட்டுநிதி மீதி நிதி நிலைமை மீதான கூற்றில் சரியாக காட்டப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

**(அ) வருமான பெறுவனவுகள்**

திணைக்களத்திற்குரிய வருமான பெறுவனவுகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2022 ஆண்டின் மதிப்பீட்டின் பிரகாரம் ஆரம்ப வருமான மதிப்பீடு ரூபா 62,000,000 ஆன போதும், நிதிக்கூற்றின் ஏசீஏ (i) மற்றும் ஏசீஏ (ii) கூற்றில் ரூபா 65,000,000 ஆக அப் பெறுமதி ரூபா 3,000,000 கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஏசீஏ (ii) கூற்றில் ஆரம்ப மற்றும் திருத்திய மதிப்பீட்டிற்கு இடையிலான வித்தியாசம் ஆரம்ப வருமான மதிப்பீட்டின் சதவீதமாக மற்றும் வித்தியாசத்திற்கான காரணம் காட்டப்படவில்லை. | தவறுதலாகஆரம்ப வருமான மதிப்பீடு ரூபா 65 மில்லியனாக நிதிக்கூற்றில் காட்டப்பட்ட போதும், திறைசேரியினால் ஆரம்ப வருமான மதிப்பீட்டை ரூபா 62 மில்லியனாகவும் திருத்திய வருமான மதிப்பீடு ரூபா 65 மில்லியனாகவும் பாதீட்டு மதிப்பீட்ல் காட்டியுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | வருமான மதிப்பீடு சரியாக நிதிக்கூற்றுக்கனுள் உள்ளடக்கப்பட வேண்டும். |

**(ஆ) மீண்டெழும் செலவினம்**

நிதிக்கூற்றுக்களிற்குரிய மீண்டெழும் செலவினங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடு அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளால் உருவான காசுப் பாய்ச்சலில் ஆளணி வேதனங்கள் மற்றும் செயற்பாட்டு செலவின் கீழ் காட்ட வேண்டிய மூலதன சொத்து புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் ரூபா 10,499,468 உம், ஆளுமை விருத்திக்காக செலவான ரூபா 5,269,137 உம் முதலீட்டு செயற்பாட்டுகளினால் உருவான காசுப் பாய்ச்சலின் கீழ் காடடிய காரணத்தால் ஆளணி வேதனம் மற்றும் செயற்பாட்டு செலவுகள் அப் பெறுமானத்தால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | மூலதன சொத்து புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் ஆளுமை விருத்திக்காக முறையே செலவிடப்பட்ட ரூபா 10,499,468 மற்றும் ரூபா 5,269,137 ஆன தொகை மூலதன செலவொன்று ஆகையால் ஆளணி வேதனங்கள் மற்றும் செயற்பாட்டு செலவினமாக கருதாது பௌதீக சொத்து நிர்மாணம் மற்றும் கொள்வனவு மற்றும் ஏனைய முதலீடுகளை கைபற்றலின் கீழ் காட்டியுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | காசுப் பாய்ச்சல் கூற்றில் சரியான தரவுகளை உள்ளடக்க வேண்டும். |

**(இ) மூலதன செலவினம்**

நிதிக்கூற்றுக்களிற்குரிய மூலதன செலவினங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடு அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளினால் உருவான காசுப் பாய்ச்சலில் பௌதீக சொத்து நிர்மாணம் அல்லது கொள்வனவு அல்லது ஏனைய முதலீடுகளை கைப்பற்றலில் பெறுமதிரூபா 128,100,164 ஆன போதும்,ரூபா 143,868,769 ஆக ரூபா 15,768,605 கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | மூலதன சொத்து புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் ஆளுமை விருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட செலவின கூட்டுத் தொகை ரூபா 15,768,605 ஆன தொகைமூலதன செலவொன்றாகையால் பௌதீக சொத்து நிர்மாணம் அல்லது கொள்வனவு அல்லது ஏனைய முதலீடுகளை கைப்பற்றல் ஒன்றாக கருதி அதனுள் உள்ளடக்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | ஐந்தொகையில் சொத்துக்கள் மேம்படுத்தலின் கீழ் காட்டப்படும் பெறுமானம் மாத்திரம் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காட்டப்பட வேண்டும். |

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர் முற்பணக் கணக்குகள் மீதான இணக்கக் கூற்று**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 506 (ஞ) பிரகாரம் வருடாந்த இணக்கக் கூற்றில் ஆண்டிறுதி உள்ளவாறான பெறுமதிகள் பணமாக (11) மற்றும் குருக்குப் பதிவு (12) கீழ் வெவ் வேறாக காட்டப்படவில்லை. | தவறுதலாக இடம்பெற்றுள்ள குறித்த தவறை எதிர் வரும் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | இணக்கக் கூற்றில் ஆண்டிறுதி மீதிகள் 11 மற்றும் 12 கீழ் வெவ் வேறாக காட்டப்பட வேண்டும். |
| (ii) | 04 ஆண்டுகளிற்கு அதிக காலமாக நிலுவையாக காணப்படும் சேவையை விடுச் சென்ற 06 அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,356,837 ஆன கடன் மீதிகள், 2022 சனவரி 17 திகதி முதல்சேவையை விடுச் சென்ற அலுவலர் ஒருவரிடமிருந்து ரூபா 113,509 ஆன மீதி மற்றும் 05 ஆண்டுகளிற்கு அதிக காலமாக நிலுவையாகவுள்ள கடமை தடை விதிக்கப்பட்ட 04 அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 168,560 ஆன மீதிகள் தொடர்பாக தாபன விதிக் | சேவையை விடுச் சென்ற அலுவலர்களிடமிருந்து ரூபா 743,315 ஆன தொகை தற்போது அறவிடப்பட்டுள்ளதுடன் மேலும் காணப்படும் ரூபா 613,522 தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும்,ரூபா 113,509 கடன் மீதியை அவர் வருகை தந்து செலுத்த உறுதியளித்துள்ளதாகவும, கடமை தடை செய்யப்பட்ட | பழைய கடன் மீதிகளை அறவிட தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தில 4.5 மற்றும் 6.3 பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அலுவலர்களின் கடன் மீதியை அறவிட தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| (iii) | ரூபா 113,509 ஆனசேவையை விடுச் சென்ற அலுவலரின் கடன் மீதியை இணக்கக் கூற்றில் 3.7 இல் சேவையை விடுச் சென்ற அலுவலரின் மீதிகளின் கீழ் காட்ட வேண்டிய போதும், இணைப்பு 3.1 இல் காட்டப்படும் திணைக்கள சேவையிலுள்ளவர்களிடம் இருந்து அறவிட வேண்டிய கடன் மீதியின் கீழ் காட்டியிருந்ததுடன், சேவையை விட்டுச் சென்ற அலுவலர்களின் பதிவேட்டிற்கு உட்படுத்துவதற்கு பதிலாக தற்போது சேவையாற்றும் அலுவலர்களின் கடன் பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்தது. | செலுத்த உறுதியளித்துள்ளதாக அறிவித்துள்ளதால் அம் ஆண்டினுள் இணைப்பு 3.1 கீழ் அவ் அலுவலரின் பெயர் உள்ளடக்கப்பட்டு இருந்ததாகவும், இவ்வாண்டினுள் அலுவலரின் பெயரை கடமையை விட்டுச் சென்ற பதிவேட்டிற்கு உட்படுத்த விடய எழுதனரிற்கு ஆலோசனை வழங்கியதாகஅறிவிக்கப்பட்டிருந்தது. | இணக்கக் கூற்றில் கடன் மீதிகளை சரியாக வகைப்படுத்த வேண்டியதுடன் கடன் மீதிகளை சரியாக குறித்த பதிவேட்டில் குறிக்க வேண்டும். |

**2 நிதிசார் மீளாய்வு**

**2.1 வருமான முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 128 (2) (உ) பிரகாரம் அரச வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அரசிற்கு பெறவேண்டியுள்ள நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவிடுவது தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் மேற்கொள்ள வேண்டிய போதும், 2022 திசெம்பர் 31 திகதியளவில் கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளிடமிருந்து கிடைக்கும் சட்ட கட்டணங்களில் இருந்து அறவிட வேண்டிய நிலுவை வருமானம் ரூபா 302,922,679 இனை அறவிட போதிய நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.<br>அந்நிலுவை மீதியினுள் 10 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 96,208,409 உம், 07 இற்கும் 09 இற்குமிடையிலான ரூபா 43,473,332 உம், ஆண்டு 04 முதல் 06 வரை ரூபா 31,524,915 உம், ஆண்டு 01 முதல் 03 வரை ரூபா 68,037,112 உம் உள்ளடக்கப்பட்டிருந்தன. | நிலுவை வருமானத்தை அறவிட திணைக்களத்தால் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன் 10 ஆண்டுகளை விஞ்சிய கடன் தொடர்பான அந்த அந்த நிறுவனங்களில் வழக்கு தொடர்பான அறிக்கைகள் காணாமல் போயுள்ளமை மற்றும் ஏனைய பல காரணங்களின் மீது செலுத்துவதில் தடையுள்ளதாக அநேக நிறுவனங்கள் அறிக்கையிட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.<br><br>எந்த காரணங்கள் நிலவிய பொதும் கடன் மீதி அறவிடுவதற்கு எடுக்க முடியுமான அனைத்து | நிதிப் பிரமாணம் பிரகாரம் நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செயற்பாடுகளையும் எடுத்துள்ளதுடன் எதிர்காலத்திலும் அச் செயற்பாடுகள் பிரபலமா மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது | |
| (ஆ) | மீளாய்வாண்டு நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் கடந்த ஆண்டிற்குரியகூட்டுத்தானங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளிடமிருந்து கிடைக்கும் சட்ட கட்டணங்களில் இருந்து அறவிட வேண்டிய நிலுவை வருமானம்ரூபா 46,154,860 ஆனதுடன் கடந்த ஆண்டிற்கு முன்னைய ஆண்டுகளிற்கு உரிய நிலுவை வருமானம் ரூபா 263,901,925 ஆனது. அவற்றிலிருந்து மீளாய்வாண்டில் அறவீடு முறையே ரூபா 21,508,160 மற்றும் ரூபா 48,710,797 ஆனதுடன் அது 46 சதவீதம் மற்றும் 18 சதவீதமான குறைந்த சதவீதத்தை பெற்றிருந்ததுடன் 2005 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரை 16 ஆண்டுகளிற்கும் 18 ஆண்டுகளிற்கும் இடையிலான காலமாக தொடர்ந்து 13 நிறுவனங்களிலிருந்து ரூபா 178,151,672 ஆன நிலுவை வருமானமொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆண்டு முதல் நிலவிய கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக கடன் மீதிகளை தீர்த்தல் 2022 ஆண்டின் நடுப்பகுதி வரை படிப்படியாக குறைந்துள்ளது. எவ்வாறாயினும் தற்போது இந்நிலைமை வழி விட்டுக் காணப்படுவதுடன் குறித்த ஆண்டில் மற்றும் அன்மித்த ஆண்டுகளில் கடன் மீதிகளை தீர்க்க நடடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், 2023 மே 10 திகதி 13 நிறுவனங்களின் நிறுவனத் தலைவர்களை அழைப்பித்து நிலுவை கடன் மீதிகளை விரைவில் தீர்க்க நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கியதாகவும், அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | நிதிப் பிரமாணம் 175 (2) பிரகாரம் நிலுவைத் தொகை தொடர்பாக தாமதமின்றி சட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், சட்ட ரீதியாக ஏனும் நிலுலை தொகையை அறவிட முடியாதெனில் நீண்ட கால் நிலுவை தொகையை திறைசேரியின் ஒருமைப்பாட்டுடன் பதிவழிக்க தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும், 2005 முதல் 2009 வரையான ஆண்டுகளிலிருந்து நீண்ட காலமாக 24 நிறுவனங்களிலிருந்து ரூபா 936,420 ஆன வருமானம் அறவிட வேண்டியதாக காணப்பட்டது. | 2005 முதல் 2009 ஆண்டு வரை நிலுவை தொகையுள்ள அநேக நிறுவனங்களின் வழக்குகளிற்குரிய தகவல்கள் கண்டறிய முடியாததால் கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்கொள்ள கடினமென தொடர்ந்தும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2005 முதல் 2009 வரை ஆண்டுகளிற்குரிய நிலுவை மீதிகளை செலுத்துவது கடினமாகவதற்குரிய தகவல்களை அழைப்பித்துக் கொள்ளவும் அதன் | நிதிப் பிரமாணம் பிரகாரம் நிலுவை தொகையை அறவிட சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பின்னர் அந்த கடன் மீதிகளை பதிவழிக்க திறைசேரிக்கு அறிவித்து தேவையான நடவடிக்கை எடுக்க எதிர்பார்ப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | |

## 2.2 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஏப்ரல் 26 திகதிய இலக்கம் 03/2022 கொண்ட தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 3 (xvii) பந்தி பிரகாரம் ஆண்டினுள் செலவு மேற்கொள்ள ஒதுக்கப்பட்ட ஏற்பாட்களில் சேமிப்பு காணப்படின் அதனை ஆண்டு முடிவடைய முன்னர் ஏனைய செலவினங்களிற்காக பயன்படுத்த முடியாதெனினும், 04 செலவு விடயங்களில் ரூபா 50,900,000 ஆன ஏற்பாட்டு தொகை நிதிப் பிரமாணம் 66 ஊடாக ஏனைய செலவு விடயகளிற்கு மாற்றப்பட்டிருந்தது. | நாட்டில் ஏற்பட்ட நிதி நெருக்கடி காரணமாக ஆண்டினுள் அனைத்து பண்டங்கள் மற்றும் சேவைகளின் விலைகள் அதிகரித்த காரணத்தால் மீண்டெழும் சில செலவி விடயங்களிற்கு ஏற்பாடு போதாததுடன், குறித்த 04 செலவு விடயங்களின் செலவுகளை முகாமைத்துவம் செய்து சேமித்துக கொண்ட ஏற்பாடுகளைநிதிப் பிரமாணம் 66 ஊடாக பற்றாக்குறையான செலவு விடயகளிற்கு மாற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை பிரகாரம் ஏற்பாடுகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும்கட்டுப்பாடுகளை மேற்கொள்ளல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 13 திகதி இலக்கம் 2022/05 கொண்ட அரச கணக்குகள் வழிகாட்டியின் 3.3 பந்திபிரகாரம் நிறுவனத்தின் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் 2022 திசெம்பர் 31 திகதியன்று கடப்பாடு இலக்க பிரகாரம் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதும், திறைசேரியின் SA 92 திரண்ட பொறுப்பு அறிக்கையில், கடப்பாடு மற்றும் பொறுக் கூற்றில் (இணைப்பு iii) கீழ் மற்றும் பொறுப்புக்கள் பதிவேட்டில் ரூபா 4,168,426 ஆன கடப்பாடுகள் உள்ளடக்கி இருக்கவில்லை. | கணக்காய்வாளர் பொழிப்பறிக்கை வரைபில் குறிப்பிடப்படும் முன்னைய ஆண்டு கொடுப்பனவுகளிற்குரிய நீர், மின்சாரம் மற்றும் தொலைபேசி பட்டியல் தாமதமாகி (2023 ஆண்டில்) கிடைத்த காரணத்தால் பொறுப்புப் பதிவேட்டில் உட்படுத்த முடியாது போனதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | அரச கணக்குகள் வழிகாட்டி பிரகாரம் பொறுப்புக்களை சரியாக வெளிப்படுத்த வேண்டும். |

### 2.4 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள |
|---|---|---|---|
| (i) | திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டப்பாட்டு தொகுதியொன்றை தயாரித்து பேணிச்செல்வதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதி செய்ய வேண்டியதுடன், அத் தொகுதியின் ஆக்கபூர்வ தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதன் பிரகாரம் தொகுதியை பயனுறுதிமிக்கதாக பேணிச்செல்ல தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டியதாகவும், அம் மீளாய்வை எழுத்து மூலமாக மேற்கொண்டு அதன் பிரதியொன்றை கணக்காய்வு தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிருந்த போதும், அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொண்டதற்கான கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | கணக்காய்வு அறிக்கையில் சுடடிக் காட்டியுள்ள தவறுகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பாக மீளாய்வு செய்து பார்த்து கணக்காய்வினால் சுட்டிக் காட்டியுள்ளவாறு மற்றும் குறைபாடுகள் எதிர்வரும் ஆண்டுகளில் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | வருடாந்த மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்களை உரிய நேரத்தினுள் தயாரிக்கப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால உறுதிப்படுத்த வேண்டியதுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்குரிய வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்பிக்க பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பேற்க வேண்டிய போதும், அறிக்கையின் 3.2 பந்தியில் குறிப்பிடப்படும் கணக்காய்வு அவதானிப்பு காரணமாக அத்தேவைப்பாட்டை மேற்கொண்டிருக்கவில்லை. | கணக்காய்வு அறிக்கையில் சுடடிக் காட்டியுள்ள தவறுகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பாக மீளாய்வு செய்து பார்த்து கணக்காய்வினால் சுட்டிக் காட்டியுள்ளவாறு மற்றும் குறைபாடுகள் எதிர்வரும் ஆண்டுகளில் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

மாதிரிக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுத்தாய்வு செய்து காட்டப்பட்டுகிறது.

| | அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **பெறுமதி ரூபா** | **இணங்காமை** | | |
| (i) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| | 177(1) | 3,466,492 | தினந்தோறும் திரட்டியிருந்த வருமானத்தை நிதி பிரமாணம் பிரகாரம் கால தாமதமின்றி அரச வருமானத்திற்கு கணக்கு வைக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்படும் தாமதத்தை தவிர்த்து தற்போது தினந்தோறும் திரட்டப்படும் வருமானம்கால தாமதமின்றி அரச வருமானத்திற்கு கணக்கு வைக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்படடிருந்தது. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | 446(இ) | 3,339,243 | நிதிப் பிரமாணம் பிரகாரம் திணைக்கள பெறுவனவிற்காக பற்றுச்சீட்டு வழங்கிய உடனே காசுப் புத்தகத்தில் அவ் பெறுவனவை உள்ளடக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்படும் தாமதத்தை தவிர்த்து தற்போது தினந்தோறும் சரி பிழை பார்த்து இணக்கத்தை நிரைவு செய்து காசுப் புத்தகத்திற்குஉட்படுத்தல் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிவிக்கப்படடிருந்தது. | நிதிப் பிரமாணம் பிரகாரம் தாமதமின்றி பெறுவனவுகள்காசுப் புத்தகத்திற்கு உட்படுதத்பட வேண்டும். |
| | 891 | | நிதிப் பிரமாணம் பிரகாரம் பிணைப்பதிவேட்டை நாளாதுவரையாக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிணைப்பதிவேட்டில்காணப்படும் குறைபாடுகளை சரிசெய்துநிதிப் பிரமாணம் பிரகாரம் பிணைப்பதிவேட்டை பேணிச் செல்ல நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்படடிருந்தது. | நிதிப் பிரமாணம் பிரகாரம் பிணைப்பதிவேட்டை பேணிச் செல்ல வேண்டும். |

## 2.6 முற்பண வழங்கல் மற்றும் தீர்ப்பனவு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 01/2020 கொண்ட அரச நிதி சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 371 (2) பிரகாரம், உப கட்டுநிதியொன்றை வழங்கியதன் பின்னர் குறித்த பணியை பூர்த்தி செய்து 10 நாட்களுக்குள் அக் கட்டுநிதியைத் தீர்க்க வேண்டிய போதும், திணைக்கள கட்டுநிதி வழங்கல் பரிசோதனையின் போது ரூபா 2,484,923 பெறுமதிக்கானகாலதாமத 64 சந்தர்ப்பங்கள் ஆனதுடன் 2022 ஆண்டில் 03 சந்தர்ப்பங்களில் பெறுமதி ரூபா 475,550 ஆன ரூபா 100,000 இற்கு அதிகமான முற்பணம் வழங்கப்பட்டு இருந்தது. | தற்போது கால தாமதமின்றி குறித்த நிமித்த உப கட்டுநிதியை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது நிமித்த உப கட்டுநிதி எல்லைகளிற்கு இணங்க மாத்திரம் முற்பணம் வழங்கப்படுவதாக அறவிக்கப்பட்டிருந்தது. | நிமித்த உப கட்டுநிதி வழங்கும் மற்றும் தீர்க்கும் போது நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு இணங்கநடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 371 (4) பிரகாரம் குறித்த மற்றும் தேவையற்ற பணிகளிற்காக உப கட்டுநிதி பெறக்கூடாத போதும்,ரூபா 399,000 ஆன முற்பணத் தொகை 02 மாதங்கள் 14 நாட்கள் முதல் 08 மாதங்கள் 24 நாட்கள் காலமொன்றாக கையிறுப்பில் வைத்துக் கொண்டு மீண்டும் தீர்த்திருந்த 05 சந்தர்ப்பங்களானது. | தற்போது உப கட்டுநிதி வழங்கும் போது குறித்த குறைபாடுகளை சரிசெய்துள்ளதாக அறவிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் பிரகாரம் தேவையற்ற பணிகளிற்காக உப கட்டுநிதி வழங்கக் கூடாது |
| (இ) | நிமித்த உப கட்டுநிதி பதிவேடு பிரகாரம் சில அலுவலர்களின் பதிவிகளை குறிப்பிடப்பட்டு இருக்காததால் அவ் அலுவலர் பதவிநிலை அலுவலரா என கணக்காய்வின் போது உறுதி செய்து கொள்ள முடியாததுடன் முற்பணம வழங்கிய காரணத்தை நிச்சயித்து குறிப்பிடாது முற்பணம் பெற்றுக் கொண்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | தற்போது உப கட்டுநிதி வழங்கும் போது குறித்த குறைகபாடுளை சரிசெய்துள்ளதாக அறவிக்கப்பட்டிருந்தது. | நிமித்த உப கட்டுநிதி பதிவேட்டை உரிய தகவல்களை உள்ளடக்கி நாளாதுவரையாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 2.7 வங்கிக் கணக்கு செயற்பாடுகள்

வங்கிக் கணக்கு செயற்பாடுகள தொடர்பாக மேற்கொண்ட மாதிரி கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்திற்கு சொந்தமான இலங்கை வங்கி தப்ரோபேன் கிளையின் வங்கி இலக்கம் 2026431 கொண்ட (Attoney Genaral Asia Foundation Programme) கணக்கு 2005 ஆண்டு முதல் செயலற்று இருப்பதுடன் 2023 பெப்ரவரி 05 திகதி இக் கணக்கில் மீதி ரூபா 3,000 ஆனது. | தேவையான அனைத்து தகவல்களுடன் திறைசேரி பணிப்பாளர் நாயத்திற்கு குறித்த வங்கிக் கணக்கை மூடுவதற்கு விண்ணப்பம் சமர்பித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | செயலற்ற வங்கிக் கணக்கை மூடிவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 02/2020 கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் 03 பந்தி பிரகாரம் ஒவ்வொறு ஆண்டிற்கும்அங்கீகார மதிப்பீட்டை நடைமுறைப்படுத்த வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரிக்க வேண்டியதுடன் எதிர் வரும் ஆண்டில் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தைநடைமுறை ஆண்டின் திசெம்பர் 15 திகதிக்கு முன்னர் தயாரித்து பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு சமர்பித்து அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டிய போதும், 2022 ஆண்டின் செயல் நடவடிக்கை திட்டததை 2022 பெப்ரவரி 03 திகதி கணக்கயாவிற்கு சமர்பிக்கப்பட்டிருந்தது. | எதிர் வரும் ஆண்டின் செயல் நடவடிக்கை திட்டததை உரிய தினத்தில் தயாரித்து சமர்ப்பிப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை பிரகாரம் உரிய தினத்திற்கு வருடாந்த செயல் நடவடிக்கைதிட்டத்தை ததயாரித்து சமர்பிக்கவேண்டும். |

### 3.2 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 2/2020 கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் 10.2 பந்தி பிரகாரம் அரச நிதி திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டி இலக்கம் 14 இல் குறிப்பிடப்படும் படிவம் பிரகாரம் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை தயாரிக்க வேண்டியதாக இருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள |
|---|---|---|
| சுற்றறிக்கையின் 12.1 பந்தி பிரகாரம்வருடாந்த செயலாற்றுகை அறிக்கை நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்கள் செல்ல முன்னர் மற்றும் 2022 மே 26 திகதிய PFD/RED/REG/02/CC/2022 நிதி அமைச்சின் கடிதம் பிரகாரம் 2021 ஆண்டில் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை, 150 நாட்கள் செல்ல முன்னர் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு முடியாது போனால் பாராளுமன்றத்திற்குமுன்வைக்க 2022 ஜுன் 30 வரை கால நீடிப்பு செய்துள்ள போதும், 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கப்பட்டு இருந்தது 2022 திசெம்பர் 20 திகதி ஆவதுடன்,சுற்றறிக்கையின் 10.2 பந்தி பிரகாரம் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(2) பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் சமர்பிக்க வேண்டிய வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2023 மே 12 திகதி சமர்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்பட்ட தாமதத் தவறினால் 2020 மற்றும் 2021 ஆண்டின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்திறகு சமர்பித்தல் தாமதமானதுடன் எதிர்காலத்தில் உரிய திகதிக்கு அறிக்கை சமர்பிக்க நடவடிக்கை எடுப்பதாகவும்,எதிர்வரும்செயலாற்றுகை அறிக்கையை கணக்காய்வு சட்டத்தின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் சமர்பிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை பிரகாரம் செயலாற்றுகை அறிக்கையை உரிய திகதியில் பாராளுமன்றத்திற்கு சமர்பிக்க வேணடியதுடன் நிதிக்கூற்றுக்களுடன் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை சமர்பிக்கப்பட வேண்டும். |

### 3.3 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள |
|---|---|---|---|
| (அ) | அரச பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 2006 (4) (2) பிரிவின் பிரகாரம் குறைந்த பட்சம் 03 வருடகாலத்திற்காக எதிர்பார்த்த பெறுகைகள் திட்டத்தை தயாரிக்க வேண்டியதுடன், அப் பிரிவின் 4.2 (இ) பிரகாரம் பெறுகைகள் நடவடிக்கைகள் பிரதான பெறுகைகள் திட்டத்தில் பட்டியல் படுத்தியிருக்க வேண்டும். மேலும்அரச பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 4.2.1(இ) பிரிவின் பிரகாரம் பெறுகைகள் திட்டத்தை பிரிவாக தயாரித்தல் மற்றும்இலக்கம் 2/2020 மற்றும் 2020 ஆகஸ்ட் 28 திகதிய அரச நிதி சுற்றறிக்கையில 04 | 2021 ஆண்டின் மூலதன செலவினத்திற்காக வழங்கியிருந்த ஏற்பாட்டை 2020 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளின் பட்டியல்களை தீர்க்க பயன்படுத்தியதுடன் விரிவான பெறுகைகள் திட்டமொன்றை தயாரிக்க போதியளவான ஏற்பாடு கிடைத்திருக்கவில்லை. அன்றாட செயற்பாட்டு | அரச பெறுகைகள் வழிகாட்டி கோவையின் எற்பாடுகள் பிரகாரம்மற்றும் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |

| | | |
|---|---|---|
| பநிதி பிரகாரம் வருடாந்த பெறுகைகள் திட்டதிதை நடைமுறை ஆண்டு திசெம்பர் 10 திகதிக்கு முன்னர் தயாரித்து அதற்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரத்தை பெற்று அதன் பிரதியொன்றை தேசிய பெறுகைகள் ஆணைக்குழு, கணக்காய்வாளர் நாயகம் மற்றும் அரச நிதி திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நடவடிக்கைகளுக்காக நிதி பெறுகைகள் திட்டமொன்றை மாத்திரம் தயாரித்ததாகவும், எதிர்வரும் ஆண்டில் உரிய திகதியில் பெறுகைகள் திட்டமொன்றை தயாரித்து கணக்காய்விற்கு சமர்பிப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | |

### 3.4 சொத்தக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் 11.1 பந்தி மற்றும் நிதிப்பிரமாணம் 756(6) பந்தி பிரகாரம் வருடாந்த பண்டக கணிப்பீட்டை மேற்கொண்டு பூர்த்தி செய்யும் கால எல்லையை காண்பித்திருந்த போதும், திணைக்களத்தினால் வருடாந்த பண்டக கணிப்பீட்டை அக்கால எல்லையிற்கு மேற்கொள்ளல், அடுத்த நிதியாண்டு பெப்ரவரி 28 இற்கு முன்னர் ஆண்டின் பண்டக கணிப்பீட்டு அறிக்கை பிரகாரம் பற்றாக்குறை மற்றும் மிகையை அறிக்கையிடல் மற்றும் நடவடிக்கை எடுத்தல் மற்றும் அவ் அறிக்கையை கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்பியிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டுகளின் பண்டக கணிப்பீடுகளை உரிய கால எல்லையினுள் மேற்கொள்ள தேவையான நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், பண்டக கணிப்பீட்டு அறிக்கை பிரகாரம்பற்றாக்குறை மற்றும் மிகை தொடர்பாக செயற்பாடுகளை செயற்படுத்தி வருவதாகவும், அறிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை பிரகாரம் பண்டக கணிப்பீடு உரிய கால எல்லை பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்யதுடன், உரிய திகதியில் மிகை மற்றும் பற்றாக்குறை தொடர்பாக செய்பாடுகளை எடுக்க வேண்டும். |

### 3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| அரசிற்கு உச்ச அனுகூலம் கிடைக்கும் வகையில் கொடுப்பனவு செய்ய வேண்டிய போதும், திணைக்களத்தினால் வாடகை அடிப்படையில் பெற்றிருந்த கட்டிடமொன்றிற்கு மற்றும் திணைக்களத்தின் புதிய கட்டிடத்திற்காக 2022 சனவரி முதல் மார்ச் வரை | திறைசேரியிடம் கட்டுநிதி கோரிய போதும், குறித்த கட்டுநிதி உரிய தினத்திற்கு கிடைக்காததால் மின்சார பட்டியல் கொடுப்பனவு தாமதிப்பதால் வட்டித் | மின்சார பட்டியலிற்கு கொடுப்பனவு செய்யும் போது வட்டி செலுத்தப்படாத வாறு உரிய |

| | | |
|---|---|---|
| மின்சார பட்டியல்களிற்கு கொடுப்பனவு செய்கையில் மாதாந்த மின்சார பாவனைக்கு செலவிற்கு மேலதிகமாக கூட்டுத் தொகை ரூபா 176,477 ஆன தண்ட வட்டித் தொகையுடன் மின்சார பட்டியல்களிற்காக கொடுப்பனவு செய்ததில் அரசிற்கு நிதிரீதியான பிரதிகூலமொன்று ஏற்பட்டுடிருந்தது. | தொகையொன்று சேர்வதுடன் எதிர்காலத்தில் இந் நிலைமையை தவிர்த்துக் கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | தினததில் கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்.

### 4.1 நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள |
|---|---|---|
| 2018 ஏப்ரல் 27 திகதிய இலக்கம் எம்எஸ்டீடப்/08/65 கொண்ட நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் அமைச்சினால் வெளியிடப்பட்ட கடிதம் பிரகாரம் திணைக்களத்தினால் 2022 ஆண்டிற்கான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் சுட்டிகளை இனங்கண்டு அந்த நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதனை ஒருங்கிணைக்க அலுவலர்களை நியமித்து நிலைபேறான அபிவிருத்தி நிகழ்சித் திட்டத்தை தயாரித்திருக்கவில்லை. | அறிமுகம் செய்துள்ள நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களிற்கு இடையில் 16 ஆவது நோக்கமான சமாதானம்,நீதி மற்றும் சக்திவாய்ந்த நிறுவனம்எனும் நோக்கத்தை அடைந்து கொள்ள சட்டமா அதிபர் திணைக்களத்தினால் எதிர்பார்க்கப்படுகிறது. அதற்காக திணைக்களத்தின் பல பிரிவுகள் தாபிக்கப்பட்டுள்ளதுடன் சிறுவர் துஸ்பிரயோகம், மொது மக்கள் முறையீடுகளுக்கு அந்த பிரிவுகளினால் பல செயற்பாடுகள் எடுக்கப்படுகிறது. எதிர் காலத்தில் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை தயாரிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்ததது. | நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் அமைச்சினால் வெளியிடப்பட்ட கடிதம் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை தயாரிக்க வேண்டும். |

### 4.2 பிரசைகள் / சேவைபெறுனர் பிரகடனததை அறிமுகம் செய்தல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள |
|---|---|---|
| மேற்குறித்த தலைபில் வெளியிடப்பட்டுள்ள 2008 பெப்ரவரி 06 திகதிய மற்றும் 2018 சனவரி 24 திகதிய இலக்கம் 05/2008 மற்றும் 05/2008 (i) கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கை பிரகாரம் அரச துறை செயற்பாடுகளை | எதிர்காலத்தில் குறித்த பிரகடனததை அறிமுகம் செய்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

மிக்க வினைத்திறனாக மேற்கொள்ள மற்றும் அதற்காக தொடர்புபடும் தரப்பினர்களிற்கு இடையில் மிக்க புரிந்துனர்வு மற்றும் ஒவ்வொறுவரிற்கும் இடையில் நம்பிக்கையை மேம்படுத்த பிரசைகள் / சேவைபெறுனர் பிரகடனததை அறிமுகம் செய்தலை ஒவ்வொறு அரச நிறுவனங்களினாலும் மேற்கொள்ள வேண்டியிருந்த போதும், அவ்வாறு செய்திருக்கவில்லை.

## 5. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்கள செயலாற்றுகைக்கு நேரடியாக தாக்கம் செலுத்தும் சிரேஷ்ட மட்டத்தின 523 அங்கீகார பதவிகள் காணப்பட்ட போதும் 2022 திசெம்பர் 31 திகதியன்று உள்ளவாறான ஆளணி 223 ஆன காரணத்தால் 300 அலுவலர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டன. அவ்வாறே மூன்றாம் மற்றும் இரண்டாம் மட்டத்தில் அங்கீகார ஆளணி எண்ணிக்கை முறையே 15 உம் மற்றும் 359 ஆன போதும், 2022 திசெம்பர் 31 திகதியன்று உள்ளவாறான ஆளணி முறையே 05 உம் மற்றும் 156 ஆன காரணத்தால் மூன்றாம் மற்றும் இரண்டாம் மட்ட அலுவலர்கள் 213 ஆன வெற்றிடங்கள் காணப்பட்டன. மேலும், ஆரம்ப மட்டத்தின் அங்கீகார ஆளணி 404 ஆன போதும், 2022 திசெம்பர் 31 திகதியன்று உள்ளவாறான ஆளணி 277 ஆன காரணத்தால 127அலுவலர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டன. அதன் பிரகாரம் இந்த பதவிகளின் வகைப்படுத்தலின் கீழ் உள்ள ஆளணி சதவீதம் முறையே 57, 57 மற்றும் 31 ஆனது. | தேசிய பாதீட்டு சுற்றறிக்கை பிரகாரம் வெற்றிட பதவிகளிற்காக ஆட்சேர்பு நிறுத்தப்பட்டுள்ளதால், அதற்காக அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள அடிக்கடி நீதிமன்ற அமைச்சினூடாக பிரதமர் செயலகத்தை அறிவூட்டியுள்ளதாகவும், மூன்றாம் மற்றும் இரண்டாம் மட்ட பதவிகளிற்காக அலுவலர்களை பெற்றுத்தருமாறு பொது நிர்வாக அமைச்சை அடிக்கடி அறிவூட்டியுள்ளதாகவும், ஆரம்ப மட்ட ஆளணியில் வெற்றிடங்கள் காணப்படுவதால் அவ் வெற்றிடங்களை நிரப்பித்தருமாறு பொது நிர்வாக அமைச்சை அறிவூட்டி உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | வெற்றிடங்கள் காணப்படுவது திணைக்களத்தின் செயலாற்றுகையின் மீது தாக்கம் செலுத்துவதால் கூடிய விரைவில் வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலக்கம் 02/2018 மற்றும் 2018 சனவரி 24 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கையின் 04 பந்தி பிரகாரம் திணைக்களத்தினால் மனிதவள அபிவிருத்தித் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை | இவ்வாண்டு முதல் மனிதவள அபிவிருத்தி திட்டமொன்றை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் மனிதவள அபிவிருத்தி திட்டமொன்றை தயாரித்தல் மற்றும் வேண்டும். |